## இன்னொரு ஊடகவியலாளர் கடத்தப்பட்டார்

லங்கா ஈ நியூஸ் இணையத்தள ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட கடந்த வாரம் முதல் காணாமல் போயுள்ளதாக அவரின் மனைவி தெரிவித்துள்ளார். ராஜகிரியவிலுள்ள அவரின் அலுவலகத்திற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 அளவில் அவர் புறப்பட்டுச் சென்றதாக அவரது மனைவி குறிப்பிட்டார். இரவு 8.30 மணிவரை அவர் அலுவலகத்தில் இருந்துள்ளார். அதன்பின்னர் கொஸ்வத்தைப் பகுதியில் பேருந்து ஒன்றில் சென்றுகொண்டிருப்பதாக அவரைத் செல்பேசியில் தொடர்புகொண்ட அவரது நண்பரிடம் தெரிவித்துள்ளதாக அவரின் மனைவி கூறினார். எனினும் இரவு 9.30 முதல் தொடர்ச்சியாக அவரின் செல்பேசிக்குத் தொடர்பு கொள்ள முயன்றபோதிலும் அது செயலிழந்த நிலையில் உள்ளதாக பிரகீத் எக்னலிகொடவின் மனைவி கூறுகிறார். இது தொடர்பாக எக்னலிகொடவின் மனைவி ஹோமாகம காவல் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார். ஹோமகமவில் இவரின் வீட்டுக்கு அருகில் இலக்க தகடு அற்ற வெள்ளை வான் நிறுத்தப்பட்டிருந்ததை பிரதேசவாசிகள் அவதானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எக்நேலிகொட, சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வந்ததுடன் லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தில் சுயாதீன ஊடகவியலாளராக அரசியல் கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். அத்துடன் தேசிய புத்திஜீவிகள் சபையின் உறுப்பினராகவும் இவர் செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில் கலாச்சார சீரழிவு

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் பாரம்பரியங்கள் சீரழிந்து விடாமல் பாதுகாக்க வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார். யாழ் அராலியில் இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் இதனைத் தெரிவித்துள்ளார். திறந்துவிட்ட யாழ்ப்பாணத்தில் தென்னிலங்கை காலாச்சாரம் பரவத்தொடங்கியுள்ளது. தற்போது யாழ்மாவட்டத்தில் தமிழ் மக்களின் காலாச்சாரம் சீரழியும் நிலையினை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது. இது தமிழ் உணர்வாளர்கள் மத்தியில் கவலையினை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் இருந்து மீண்டு தமிழ் பாரம்பரியங்களை பாதுகாக்கும் பொறுப்பு இளைய சமூகத்திடம் உண்டு. தமிழ் மக்களின் பாரம்பரியங்கள் பேணப்பட்டு அடுத்த சமூகத்திடம் அதனை ஒப்படைக்கும் பொறுப்பு இளைய தலைமுறையிடம் உண்டு. இவற்றை மேற்கொள்ளாவிடின் தமிழர்கள் பண்பாடுகளை தொலைத்தவர்களாக மாறிவிடுவோம் என்றும் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

## காணாமல் போன மாணவி பூசா முகாமில்

கடந்த நவம்பர் மாதம் காணாமல் போன பெரதேனியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த தமிழ் மாணவி இராசையா துவாரகா பூசா தடுப்புமுகாமில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பெரெதேனியா பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவியான இராசையா துவாரகா கடந்த நவம்பர் மாதம் காணாமல் போயிருந்தார். அவரை பல இடங்களிலும் தேடிய போதும் காவல்துறையினர் தகவல்கள் எதனையும் தெரிவிக்க மறுத்துவிட்டனர். எனினும் சிறீலங்காவில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் அமைப்பு மேற்கொண்ட முயற்சிகளை தொடர்ந்து அவர் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து தூவரகாவை அவர்களின் பெற்றோர்கள் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மாணவர் அமைப்பு மேற்கொண்டிருந்தது. முதலில் துவாரகாவை தாம் கைதுசெய்யவில்லை என மறுத்த காவல்துறையினர் பின்னர் ஒப்புக்கொண்டதாக மாணவர் அமைப்பின் தலைவர் உடுல் பிரேமரட்னா தெரிவித்துள்ளார். துவாரகாவின் பெற்றோரும் வடபகுதியில் உள்ள இராணுவ முள்வேலி தடுப்புச் சிறை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் அண்மையில் தான் அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

## ஆட்டிலெறிகளை வரவிடாது மேற்குலகம் தடுத்தது

வன்னியில் போர் இறுதிக்கட்டத்தை நெருக்கியபோது செக்குடியரசில் கொள்வனவு செய்யப்பட்ட ஆட்டிலெறிகளை சிறீலங்காவுக்கு கொண்டுவர விடாது மேற்குலக நாடுகள் கடுமையான அழுத்தங்களை ஏற்படுத்தியிருந்ததாக ஐ.நாவுக்கான சிறீலங்காவின் நிரந்தர பிரதிநிதி பாலித கோகன்னா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வன்னியில் நடைபெற்ற போர் இறுதிக்கட்டத்தை அடைந்த போது படையினருக்கு அவசரமாக தேவைப்பட்ட ஆட்டிலெறிகள் மற்றும் அதற்கான எறிகணைகளை வெளிநாடுகளில் கொள்வனவு செய்ய நாம் முயன்ற போது மேற்குலக நாடுகள் அதனை தடுத்திருந்தன. எனினும் நாம் செக்குடியரசிடம் இருந்து அவற்றை கொள்வனவு செய்திருந்தோம். ஆனால் அவற்றை சிறீலங்காவுக்கு கப்பல் மூலம் எடுத்துவருவதற்கான துறைமுக வசதிகள் செக்குடியரசில் இருக்கவில்லை. செக்குடியரசுக்கு அருகில் உள்ள நாடுகளிடம் நாம் துறைமுகங்களின் பயன்பாட்டுக்கான உதவியை கோரியபோது, அந்த நாடுகளுக்கு அழுத்தங்களை ஏற்படுத்தி அதனையும் மேற்குலகம் தடுத்திருந்தது. அதன் பின்னர் நாம் போலந்தை சம்மதிக்க வைத்து, பீரங்கிகளை தொடரூந்து மூலம் போலந்துக்கு எடுத்து வந்து அங்கிருந்து கப்பல் மூலம் சிறீலங்காவுக்கு எடுத்து வந்திருந்தோம். விமானம் மூலம் ஆயுதங்களை நாம் தருவிக்க முயன்ற போதும் மேற்குலகம் அதனையும் தடுத்து விட்டது. தம்மை மேற்குலகம் காப்பாற்றும் என விடுதலைப்புலிகள் நம்பினார்கள். ஆனால் அவர்களை அவ்வாறு செய்ய விடாது நாம் தடுத்து விட்டோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

→ 08

# இராமர் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன?

– ச. வி. கிருபாகரன்



'இராமர் ஆண்டாலென்னா, இராவணன் ஆண்டாலென்னா?' என்பது முதுமொழி. சிறீலங்காவை 'பொன்சேக்கா ஆண்டாலென்ன, ராஜபக்ச ஆண்டாலென்ன?' என்பது பல சகாப்தங்களாக, ஆண்டுகளாக, மாதங்களாக உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழரின் அவலக் குரலுடன் கூடிய புதுமொழி!

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் பற்றி மிகச் சுருக்கமாக கூறுவதனால், உலகில் தேர்தலில் தோல்வி அடைபவர்களில் பெரும்பாலானோர், தமது தோல்விக்கு தேர்தலில் இடம்பெற்ற ஊழலே காரணமென கூறுவது ஓர் நவீன நாகரீகமாக மாறியுள்ளது. அதற்காக தேர்தலில் ஊழல்கள் ஒன்றும் நடைபெறுவதில்லை என்றோ, அல்லது மகிந்த ராஜபக்சவின் வெற்றிக்கு வக்காளத்து வாங்குவதோ எனது நோக்கமில்லை. மியன்மார், ஈரான் ஆகிய நாடுகளில் நடைபெற்ற தேர்தல் முடிவுகளை நாம் யாவரும் அறிவோம்.

கடந்த ஜனவரி மாதம் 23ம் திகதி, பேராசிரியர் டேவிட் குமாரினால் ஓர் ஆங்கில இணையத்தள பத்திரிகைக்கு வெளியிட்ட கருத்தின் பிரகாரம், ஈரான் ஜனாதிபதி தேர்தலின் வாக்கு எண்ணும் வேளையில் நடந்த கபடத்தனமான வேலைகள், சிறீலங்காவின் ஜனதிபதி தேர்தலில் நடைபெறுவதற்கான சாத்தியம் இல்லாத பொழுதும், எதிர்வரும் 26ம் திகதி தேர்தலுக்கான கபடத்தனமாக வாக்குகள் ஏற்கனவே நிறைவேற்றப் பட்டுள்ளதா? என்ற கேள்வியுடன் தனது ஆய்வை மேற்கொண்டிருந்தார்.

வெற்றி தோல்வி ஒரு புறமிருக்க, எமது தாயாக பூமியில் இடம்பெயர்ந்து வாழும் எமது உடன் பிறப்புக்களின் வாழ்வில் மாற்றம் ஏற்படுத்தக் கூடிய மனிதாபிமான தேவைகளை நிவிர்த்தி செய்யும் பணிக்கான இராஜதந்திர நகர்வுகளை சரியான முறையில் நகர்த்த, மக்களின் பிரதிநிதிகளாக விளங்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கோபதாபங்களை மறந்து சேவையாற்ற முன்வர வேண்டும். அடுத்து, புலம்பெயர் வாழ்வில் தாம் ஈழத் தழிழ் மக்களின் அரசியல் வேலைத் திட்டங்களில் வேலை செய்கிறோம் என மார்பு தட்டுவோர், மிக அவதானமாக தமது வேலைகளை மேற்கொள்ளாத கட்டத்தில் அபாயங்களை சந்திக்க நேரிடும்.

கடந்த நான்கு ஆண்டுகளாக உள்ள சிறீலங்கா அரசின் பதவிகளிலோ, செயற் திட்டங்களிலோ எந்தவித மாற்றங்களும் ஏற்படவும் இல்லை, எதிர்வரும் ஆறு வருடத்திற்கோ, எட்டு வருடத்திற்கோ மாற்றம் ஏற்படப்போவதும் இல்லை. ஆகையால் புலம்பெயர் வாழ் தமிழ் மக்களின் செயற்திட்டங்கள் முடக்கப் படுவதற்கான சாத்தியங்கள் நிறைந்து காணப்படுவதை யாவரும் அறிந்திருக்க வேண்டும். இதேவேளை மனித உரிமைச் செயற்பாட்டில், சிறீலங்கா அரசு மேற்கு நாடுகளுடன் மோத வேண்டிய காலகட்டம் இது.

# சிறீலங்கா ஒரு காட்டுமிராண்டி அரசா?

மனித உரிமை விவகாரங்களில் மிக மோசமான ஒரு நாடாக சிறீலங்கா விளங்குகின்றது. மோசமான படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் என சர்வதேச ரீதியாக குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட ஒரு அரசாங்கமாக இன்று சிறீலங்கா இருக்கின்றது. அதன் தொடரும் செயற்பாடுகள் சிறீலங்காவை ஒரு காட்டுமிராண்டித்தனமான அரசாங்கமா? என்றே எண்ணத் தோன்றுகின்றது.



சாட்டி மாவீரர் துயிலும் இல்லம்

போராளிகள் என்பதால் மட்டுமல்ல இறந்துபோன ஒருவரின் புதைகுழிக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பது உலக மனித நாகரீகமாக கருதப்படுகின்றது. ஆனால், சிறீலங்கா இறந்துபோனவர்களின் புதைகுழிகள் மீது டாங்கிகளால், கவசவாகனங்களால் உழுது தனது கோர முகத்தை காட்டியிருக்கின்றது. இன்று தமிழீழ விடுதலைக்காக போராடி உயிர்நீத்த மாவீரர் துயிலும் இல்லங்கள் சிறீலங்காவின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அவ்வாறு இருக்கின்ற மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் உடைத்து நொருக்கப்பட்டு உழுது வைத்திருப்பது சிறீலங்காவின் நாகரீமற்ற மிகக்கொடூரமான அதன் முகத்தைக் காட்டிநிற்கின்றது. கிளிநொச்சியை கைப்பற்றியவுடன் அங்கிருந்த மாவீரர் துயிலும் இல்லத்தை நொருக்கி சாதனையாக்காட்டியிருந்தனர்.

தற்போது, யாழ்குடாவில் இருந்து வெளிவரும் ஆதாரங்கள் கோப்பாய் மற்றும் தீவுப் பகுதி சாட்டியில் அமைந்திருந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் அடையாளம் தெரியாதளவிற்கு முற்றாக அழிக்கப்பட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது. மாவீரர்களின் கல்லறைகளை அழிப்பதன் மூலம் தமிழ் மக்களின் மனங்களில் இருந்து அவர்களை அகற்றிவிடலாம் என்று சிறீலங்கா எண்ணுகின்றது. ஆனால், மாவீரர்கள் புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் நாளை மீண்டும் உயிர்பெறும்போதும் சிங்களத்தின் கனவுகள் தகரும் என்பதே உண்மை.

இதேவேளை, வன்னியில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் மற்றும் தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் வழிபாட்டுதலங்கள் என்பன சிறீலங்காப் படையினரால் அழிக்கப்பட்டு, அங்கு பௌத்த விகாரைகளும் சிங்கள வியாபார நிலையங்களும் பல்கிப் பெருகியுள்ளன. அத்துடன், இடித்தழிக்கப்பட்டுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் சிறீலங்காப் படையினரின் போர் வெற்றி நினைவு தூபிகளை அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.